# தமிழ்ச்சிட்டு



சிறுவர்
கலை இலக்கியத்
திங்களிதழ்

குரல் : 23
இசை : 4

# எப்படி ?



மிகவும் சிறிய கல்லையே
மிதக்க வைப்ப தெப்படி ?
மிகவும் பெரிய கப்பலோ
மிதந்து செல்வ தெப்படி ?

ஈனத் துரும்பை வானிலே
எடுத்து வீசப் பறக்குமோ ?
வானக் கப்பல் தரையிலே
விழாமல் பறப்ப தெப்படி ?

சிறிது தொலைவில் நின்றவன்
சொல்லும் சொற்கள் கேட்குமோ ?
ஒருவன் பேசும் ஒலியினை
உலகம் கேட்ப தெப்படி ?

சொன்ன பாட்டை முழுவதும்
திருப்பிச் சொல்ல முடியுமோ ?
பண்ணும் இசையும் தட்டிலே
பதித்து வைப்ப தெப்படி ?

இரவும் பகலும் அறிஞர்தாம்
எண்ணிக் கண்டு பிடித்தனர் !
இரவும் பகலும் படிக்கிறோம்;
என்ன கண்டு பிடிக்கிறோம் !

-1960

# உதவாதவை

எருதில் லாத மொட்டை வண்டி
ஏறிச் செல்ல உதவாது !
எருவில் லாத வெறுமை நிலமோ
எதுவும் விதைக்க உதவாது !

வெட்டு கின்ற கிணற்றுத் தண்ணீர்
வேகும் வீட்டிற் குதவாது !
கொட்டு கின்ற மழையோ என்றும்
குளித்துக் கொள்ள உதவாது !

கரையில் லாத ஏரித் தண்ணீர்
கழனிக் கென்றும் உதவாது !
உரையில் லாத செய்யுள் நூலோ
உணரார்க் கென்றும் உதவாது !

-1968

**பாவலரேறு பெருஞ்சித்திரனார்**

# தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்


"இன்றைய பயனோ
நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர்
நாளைய உலகம்!
நன்று செய்வதே
நமக்குநல் வாழ்க்கை
என்றும் அழியாது
இருப்பது புகழே!

— பாவலரேறு


குரல் : 23, இசை : 4

தென்மொழி மேழம் 2031 (ஏப்பிரல் 2000) இதழின் இணைப்பு

நிறுவனர்
**பாவலரேறு பெருஞ்சித்திரனார்**

ஆசிரியர்:
**தாமரை பெருஞ்சித்திரனார்**



அனைத்துத் தொடர்புகளுக்கும்:
**'தென்மொழி'**
செந்தமிழ் அடுக்ககம்,
மேடவாக்கம் கூட்டுச்சாலை,
சென்னை 601 302.
தொலைபேசி எண் : 239 0231


## தேர்வும் விடுமுறையும்!

இந்த முழு ஆண்டில் ஆடிய ஆட்டமெல்லாம் மறந்துபோகிறபடி தேர்வு வந்துவிடத் தலைகவிழ்ந்து படிக்கத் தொடங்கியிருப்பீர்கள் இல்லையா?

மனப்பாடம் செய்து ஏதோ ஒன்றை எழுதுகிறபடி படிக்கக் கூடாது. விளங்கிக் கொண்டு படித்திடல் வேண்டும். பொருள் விளங்கப் படிக்கிறபோது — விரிவான விடையை நாம் தெளிவாகத் தர முடியும் தானே!

தேர்வுக்காகப் படிப்பது மட்டுமே கல்வி இல்லை. தேர்வு என்பது நம் கல்வி நிறுவனங்கள் நமக்கு வைப்பது. அதற்காக நாம் விரைந்து விரைந்து படித்துத் தேர்வு எழுதிவிடுவதோடு அந்தக் கல்வி முடிந்துவிடாது.

நம்மை, நம் அறிவை வளர்த்துக் கொள்வதே கல்வி. நாம் எதை எதைப் பார்க்கின்றோமோ, எவற்றோடெல்லாம் பழகுகின்றோமோ அவை பற்றி யெல்லாம் அறிந்து கொள்வதும் கல்விதான்.

காலையில் எழுகிற ஞாயிறு ஏன் சிவந்து காணப்பெறுகிறது என்கிற வினாவை நமக்குத் தேர்வின் வினாத் தாள்கள் மட்டுமே வினவ வேண்டும் என நினைக்கக் கூடாது.

காலம் என்பதை நாம் இழந்துவிட்டால் திரும்பப் பெற இயலாது. இந்தப் பொழுதைப் போக்கிவிட்டு நாம் வருகிற பொழுதை மட்டும் எப்படிப் பயனுடையதாக்கிவிட முடியும்?

ஒவ்வொரு நொடியும் வாழ்வதன்றோ வாழ்க்கை. அந்த வாழ்க்கை என்பதே கல்வி தான் — கல்வி என்பதே வாழ்க்கை அன்றோ?

எனவே, நம்முடைய ஒவ்வொரு நொடி வாழ்க்கையிலும் உள்ள அறிவைக் கற்பதே கல்வி. அது நம் தேர்வுகளில் மட்டுமில்லை, நம் விடுமுறைக் கால விளையாட்டுகளிலும் இருக்கிறது என்பதை விளங்கிக் கொள்வோம்!

*

# சொல்லடை

— நேயன்

| | | | | |
|---|---|---|---|---|
| | 1 | | 7 | |
| 2 | | 8 | | |
| 3 | | | | |
| | | 4 | | |
| 5 | | | | 6 |

### இடமிருந்து வலம்

1. பழந்தமிழகத்தில் போரில் இறந்தவர்கள் புதைக்கப்பட்ட இடத்தில் வைக்கப்படும் அடையாளம்.
2. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இவன் கட்டிய அணை இன்றும் நிலைத்து நிற்கிறது
3. இந்திய ஒன்றியத்திலேயே கோழிப் பண்ணை – முட்டைப் பெருக்கத்தில் (உற்பத்தியில்) முதலிடத்தில் உள்ள தமிழக நகரம்.
4. திருவள்ளுவர் சிலை செதுக்கப்பட்ட மூன்று இடங்களில் ஒன்றை இப்படிச் சுருக்கமாக அழைப்பார்கள்.
5. சேலம் மாவட்டத்தில் அதிகம் விளையக்கூடிய ஓர் உணவுப் பயிர். (3)

### வலமிருந்து இடம்

6. எய்தவன் இருக்க இதனை நோவானேன்?

### மேலிருந்து கீழ்

1. தமிழகத்தில் அதிகம் கன்னெய் எடுக்கப்படும் இடம்.
7. இது பிறக்காமல் நயன்மை பிறக்காது. (4)

### கீழிருந்து மேல்

5. நச்சுப் பாம்பு
8. இது அழிந்தால் நாடு அழியும்.

(சொல்லடை விடை பக்கம் 9 )

---

# செந்தமிழ்ச் சிட்டே....

புலவர் பா. கு. சுப்பிரமணியம்-

ந்தமிழ்ச் சிட்டே சிரிக்கிறாய் — தமிழ்ச்
வர்க்கெல்லாம் இனிக்கிறாய்! (செந்)

ானார் முகிழ்த்ததைப் போலவே — நீ
மைப் பயனையே அளிக்கிறாய்! (செந்)

தமிழ்ப் பாவலர் சித்திரனார் தந்த
மிழ் மலராய் மணக்கிறாய்! தமிழ்ப்
றையே எம்மிடம் வளர்க்கிறாய் — நீ

கொத்துக் கொத்தாய்த் தரும் செய்திகள்தமைக்
கற்றிட ஆர்வம் கொடுக்கிறாய் — சிறு
கதைகள், பாடல்கள் படிக்கிறாய்! (செந்)

தூயதமிழ்நடைப் பாவல ரேறவர்
தோளில் இலங்கிய சிட்டுநீ தமிழ்த்
தீஞ்சுவை தோய்ந்த மெட்டுநீ! — பயிர்
காயும் நிலத்திற்கு மழையின் சாரலாய்
வேட்கையைத் தணிக்கும் கனிவுநீ — நமை
மீட்கவே வந்திட்ட துணிவுநீ! (செந்)

# விண்மீன்கள்

"உங்களுக்கெல்லாம் விண்மீன்களைப் பற்றித் தெரியும் தானே" — என்று நம்பியின் தந்தை கேட்டதற்கு,

"ஓ... நன்றாகவே தெரியும்" — என்றனர் இளங்கோ, எழில், குழலி, நம்பி அனைவரும் ஒன்றுசேர.

"சரி...சரி..., மேலும் சிலவற்றை இப்போது உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று தொடர்ந்தார் நம்பியின் தந்தை.

"பந்து போன்று உருளையான மிகுந்த ஆற்றலை உருவாக்குகிற வளி நிறைந்த வெப்பமானதே விண்மீன்.

நீர்ம வளி(அயிட்டிரசன்) பெருமளவும் பிற வகை வளிகளும் கொண்ட முகில்களில் திணிந்தனவாகவே விண்மீன்கள் இருக்கின்றன. அவற்றின் நடுப்பகுதி மிகுந்த வெப்பமுடையதாகவும், எரிகிற நிலையினதாகவும் இருக்கிறது. தொடர்ந்த எரிமலைச் செயலால், நீர்ம வளி (அயிட்டிரசன்) கதிர்மப் (ஈலியம்) பொருளாக மாறத் தொடங்கி விடுகிறது. இந் நிலை மாற்றங்கள் சில நூறு இலக்க ஆண்டுகளாய்த் தொடர்ந்தன.

அதனால் விண்மீனின் நடுவில் இருந்த கதிர்மப் (ஈலியம்) பொருள் மிக அதிகமாகிவிடவே விண்மீன்கள் வெப்பத்தினால் சிதறத் தொடங்கி விடுகின்றன.

செம்மையான நெருப்புக் குழம்புகளை நடுவிலிருந்து ஓரங்களுக்குக் கக்கிச் சிறு சிறு விண்மீன்களாக அவை உடையத் தொடங்கிக் கோள்கள் அளவிலான விண்மீன்கள் அளவிற்கு அவை சுருங்கி விடுகின்றன.

கடும் இருட்டில் நம்முடைய இயல்பான பார்வையிலேயே ஏறத்தாழ ஆறாயிரம் விண்மீன் வரை நம் கண்களுக்குத் தெரியும். நாம் ஒரு கோணத்திலிருந்து பார்க்கிறபோது மட்டும் தோராயமாக இரண்டாயிரம் விண்மீன்கள் தெரியும்.

அவற்றுள் மிக ஒளியான விண்மீன்களும், சில விண்மீன் குழுக்களும் பல பெயர்களால் நம்மால் அழைக்கப் பெறுகின்றன.

பல விண்மீன் குழுக்கள் பழங்காலத் தமிழ் விண்ணியல் ஆய்வர்களாலேயே பெயரிட்டு அழைக்கப் பெற்றன.

விலங்குகள், பொருள்கள் இவற்றின் வடிவங்களை ஒத்த விண்மீன் குழுக்களுக்கு நம் தமிழ் ஆய்வர்கள் அவ்வவற்றின் பெயர்களையே சூட்டியிருக்கின்றனர்.

கிரேக்கர்களில் பழங்கால விண்ணியலாளர்களும் சில விண்மீன் குழுக்களை நம் போலவே கண்டறிந்தனர்.

நம்முடைய பழைய நாவலந் தீவிற்குள் தந்திரமாய் நுழைந்த ஆரியப் பார்ப்பனர்கள் நம்முடைய அருந்தமிழ் வானியல் கண்டுபிடிப்புகளையெல்லாம் சமற்கிருத மொழி பெயர்ப்புச் செய்து கொண்டு, நம் தமிழ் அறிவர்களையெல்லாம் ஏமாற்றி அழித்தது பெருங் கொடுமையான வரலாறு.

அதையெல்லாம் பிறகு நான் சொல்கிறேன்" — என்று சொன்ன நம்பியின் தந்தையையே வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தனர் பிள்ளைகள்.

*

# கைவிளக்கு...

அகுதை, அத்தி, அதிகமான் நெடுமான் அஞ்சி, அந்துவங்கீரன், அந்துவஞ் சாத்தன், அருவந்தை, அவியன், ஆதனழிசி, ஆதனுங்கன், ஆந்தை, ஆமூர் மல்லன், ஆய் அண்டிரன், இயக்கன், இருங்கோவேள், இளங்கண்டீரக்கோ, இளங்குமணன், இளவிச்சிக்கோ, இளவெளிமான், ஈர்ந்தூர்கிழான், எயினன், எழினி, ஏற்றை, ஏறைக்கோன், ஏனாதி திருக்கிள்ளி, கங்கன், கட்டி, கந்தன், குமணன், கொண் கானங் கிழான், சிறுகுடிகிழான், தருமபுத்திரன், தந்துமாறன், தழும்பன், திருக்கண்ணன், தென்பரதவன், தேவன்மலையன், தொண்டைமான், நம்பி நெடுஞ் செழியன், நல்லியக்கோடன், நன்னன், நாஞ்சில் வள்ளுவன், நாலை கிழவன், பூந்துறை, நெடுமானஞ்சி, நெடுவேட்டுவன், பெருஞ்சாத்தன், பொகுட்டெழினி, பொறையாற்றுகிழான், மலையமான் திருமுடிக்காரி, மல்லிகிழான், முதியன், மூவன், மையற் கோமான் மாவன், மோகூர்ப் பழையன், வல்லார் கிழான் பண்ணன், வல்வில் ஓரி, வாட்டாற்றெழினி யாதன், விச்சிக்கோன், வில்லியாதன், வெளிமான், வேங்கை மார்பன், வேள்எவ்வி, வேள்பாரி, வையாவிக்கோப்பெரும் பேகன்.

இவர்கள் எல்லாம் கடைக் கழகக் காலத்தில் தமிழ்நாட்டின் பல பகுதிகளில் ஆட்சி செய்த குறுநில மன்னர்கள். இவர்களுள் பலர் அருஞ் செயலாற்றியவர்கள். அவர்கள் பற்றியும் அவர்கள் செயல்கள் பற்றியும் நாம் அறிந்து கொள்ள வேண்டுமில்லையா.

நேற்றைய செய்திகள்தாமே இன்றைக்கு நமக்குக் கைவிளக்கு....

## தமிழ்மண்ணின் பழமொழிகள் சில....

* அடிவானம் கருத்தால் அப்பொழுதே மழை.
* அடைமழை விட்டும் செடி மழை விடவில்லை.
* அந்தி ஈசல் அடைமழைக்கு அறிகுறி.
* கடுங்காற்று மழை கூட்டும்; கடுநட்பு பகை காட்டும்.
* காட்டுக்கு எறித நிலவும், கானலுக்குப் பெய்த மழையும்.
* தட்டான் தாழப் பறந்தால் தப்பாது மழை பொழியும்.
* தும்மலிலே போனாலும் தூரலிலே போகக் கூடாது.
* 'தை' மழை நெரய் மழை.

❑

# விடுதலை வேண்டும்

— நுதல்

அமெரிக்கச் சாயலில் வெட்டப்பட்ட தலைமுடியைச் சிலுப்பிக் கொண்டும், வெளிநாட்டு நறுமணப் பொருள்கள் பூசப்பட்ட ஐரோப்பியக் குளிர் உடைகளை உடுத்திக் கொண்டும் 'பாரத'த்துக்கு விடுதலை நாள் என்று 'வந்தே மாதிரம்' பாடுகிற மேட்டுக் குடியினரைப் பார்த்துச் சோர்ந்து போன கதிர், அந்தத் தொலைக் காட்சியை நிறுத்திவிட்டு அம்மாவிடம் ஓடிப் போனான்.

"எனக்குப் புதியதாகச் சீருடை ஒன்று எடுத்துக் கொடுங்கள் அம்மா. எங்கள் பள்ளி விழாவுக்குப் போக வேண்டும்" என்று கூறினான் அவன்.

"என்னடா கண்ணா! இந்தச் சட்டைக்கு என்ன? நன்றாகத் தானே உள்ளது. சற்றுப் பழையதாக இருக்கிறது; அவ்வளவுதானே. இதற்காகப் புதுச் சட்டை வேண்டுமாடா கண்ணா! ஒரு சட்டைகூட இல்லாமல் எத்தனைப் பேர் உள்ளார்கள்"

"போடா கண்ணா! அப்புறம் வாங்கலாம்" — என்று அம்மா சொன்னதும், முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு பள்ளிக்குப் போனான் கதிர். அம்மா எப்போதும் இப்படித்தான்; எதையாவது சொல்லி நம்மை தேற்றுவார்கள் என்று எண்ணிக் கொண்டே சென்ற கதிருக்கு, கிழிந்த சட்டையுடனும், ஒட்டுப் போட்ட கால்சட்டையுடனும் பை ஒன்றைத் தோளில் மாட்டிக் கொண்டு தனக்கு முன்னால் பள்ளிக்குச் செல்லும் சிறுவன் கண்ணில் பட்டான்.

"என்ன, இவன் இப்படிப் போகிறான் அவனுக்கும்தானே புதுச் சட்டை போட்டுக்கொள்ள ஆசை வரும். அம்மா கூறியது எந்த அளவு சரியாக உள்ளது, ஏன் இந்த நாட்டில் இப்படி ஒருநிலை, ஏற்றத்தாழ்வுகள்! இந்த ஏற்றத்தாழ்வு இருக்கும்வரை நாமெல்லாம் விடுதலை அடைந்தோம் என்றால் எப்படி? எவற்றிலிருந்து விடுதலை அடைந்தோம்?

'வந்தே மாதரம்' — என்று வறட்டுக் கத்து கத்திக் கொண்டு அமெரிக்க நாகரிகத்தில் ஊறித் திரிகிற இவர்களுக்கு, இங்கு நிலவுகிற ஏழைமையைப் போக்க எப்படி எண்ணம் வரும்?

அப்படியாக இருக்க, நாம் எப்படி விடுதலை பெற்றவர்களாவோம்.

இவர்களிடமிருந்தெல்லாம் விடுதலை பெறுவது தானே நமக்கு முதல் வேலை!"

— இப்படியாகவெல்லாம் எண்ணிக்கொண்டு சென்ற கதிருக்குத் திடுமென அப்பா அவர்கள் நேற்றுப் பேசுகிறபோது, பாவலரேறு ஐயாவின் பாடல் ஒன்றைச் சொன்னது நினைவுக்கு வந்தது... ஆம்....

"விடுதலை வேண்டும் — அது
முதல் வேலை
வேறெந்த வேலையும்
செய்யலாம் நாளை!"


*

# வரிக்குதிரை

ஒவ்வொரு விலங்கும் ஒவ்வொரு வகையில் அழகுடையது. ஆயினும், வரிக்குதிரை பார்க்க மிகவும் அழகுடையது.

குதிரை இனத்தைச் சார்ந்த இவ் விலங்கின் உடல் முழுக்க வரிகள் இருக்கும்.

அடிப்படையில் இக் குதிரை வெண்மை நிறமுடையது. அதன் மீது கருப்பிலோ அல்லது கரும் பழுப்பு நிறத்திலோ வரிப் பட்டைகள் இருக்கும். அடிவயிறு, தொடைகளின் உட்புறம் தவிர்த்து, பிற பகுதிகளில் எல்லாம் இவ் வரிப்பட்டை காணப்பெறும்.



ஆப்பிரிக்கக் கண்டத்தில் மட்டுமே வாழுகிற இக் குதிரை, இறைச்சிக்காக ஏராளமாய் அழிக்கப் பெற்றதால் இக்கால் மிகவும் அருகிப்போனது.

திறந்த புல்வெளிகளிலேயே பெரும்பாலும் வாழக்கூடிய இக் குதிரை ஒன்றரை மாத்திரி(மீட்டர்) உயரமாக இருக்கும்.


இதன் காதுகள் சற்று நீளமாகவும், பிடரி மயிர் குட்டையாகவும் இருக்கும்.

கூட்டமாகவே வாழும் இக் குதிரை மெல்லிய ஒலியைக்கூடக் கூர்மையாக அறிந்து கொள்ளும் திறனுடையது. மணி ஒன்றுக்கு 60 அயிர மாத்திரி (கி.மீ.) ஓடக் கூடிய திறனுடையதாக இருப்பினும், மிகவும் அஞ்சக்கூடிய விலங்கு இது.

சிறு ஒலி கேட்டாலும் ஓடத் தொடங்கிவிடும். மிகவும் சண்டித் தனமான இவ்விலங்கைப் பழக்குவது மிகவும் கடினமானது.

பதினைந்து ஆண்டுகளே இது வாழும் தன்மையுடையது.

# கணிப்பொறி



தொடர்வண்டி வருகிற ஒலி கேட்டு ஒரு கல் தொலைவிற்கு அஞ்சி ஓடினார்களாம் அந்தக் கால மக்கள்.

இசைத் தட்டில் ஒலி பதிவாவது கண்டு வியந்து அஞ்சினார்கள் தொடக்கத்தில்.

காடுகளில் திடுமெனத் தீப் பற்றிக் கொண்டு எரிகிறபோது கொள்ளி வாய்ப் பேய் என்பதாக அஞ்சியவர்கள்தாம் பின்னர் மரங்கள் உரசலில் எரிவதாக அறிந்து கொண்டனர் இல்லையா?

எந்த அறியாமையும் அச்சமானது தான். அறிவு நம் அச்சத்தைப் போக்கிவிடும் இல்லையா?

அதுபோலவே இன்றைக்குத் திரும்பிய பக்கமெல்லாம் தென் படுவது கணிப்பொறி.

அதைப் பார்த்ததும், 'அதை நாம் பயன்படுத்த முடியுமா?' — என்று மலைப்பது நம் அறியாமை தானே.

நாம் எதற்கும் அப்படி அச்சப் படத் தேவையில்லை.

கணிப்பொறியின் இயக்கத்தை நாம் விளங்கிக் கொண்டால் நமக்கு ஏன் அச்சம்?

கணிப்பொறியால் முதலில் என்னவெல்லாம் நாம் செய்ய முடியும் என்று பார்த்தல் வேண்டும்.

அச்சிடுவது, கணக்குப் பார்ப்பது, படங்கள் வரைவது, பொறியியல் பணிகள் செய்வது — போன்ற ஏராளமான பணிகளை நாம் கணிப் பொறியின்மூலம் செய்யமுடியும்.

கணிப்பொறியில்லாமல் எழுத்துகளைக் கோத்து, அச்சிட்டுக் கொண்டிருக்கிற பணிகளைப் போன்று பற்பல மடங்கு விரைவாகவும், செப்பமாகவும், சிறப்பாகவும் கணிப்பொறியைக் கொண்டு அச்சிட முடியும்.

ஆக, அதுபோன்றதான நிலையில் கணிப்பொறி எப்படி இயங்குகிறது என்றும், எப்படி நாம் அதை இயக்குவது என்றும் இனித் தொடர்ந்து பயிலலாமா?

— தொடரும்....

---

## சொல்லடை: விடை

| | | | | |
|---|---|---|---|---|
| ம் | 1 ந | டு | 7 க | ல் |
| 2 க | ரி | 8 கா | ல | ன் |
| 3 நா | ம | க் | க | ல் |
| ரு | ண | 4 அ | ம் | பை |
| 5 க | ம் | பு | ம் | அ 6 |

# கொடுக்கனுக்கு அப்பால்

அந்தக் காலங்களில் புலவர்களே மிகுந்த அறிவு பெற்ற அறிவர்களாக இருந்தனர். எனவே அவர்களை எல்லாம் அரசர்கள் பாராட்டிப் பரிசுகள் கொடுத்தார்கள்.

அரசனிடம் பரிசுப் பொருள்கள் பெற வேண்டியே புலவர்களும் அரசனை மிகையாகப் பாராட்டவும் செய்தனர்.

எனவே அரசர்களும் தம்மைப் பாராட்ட வேண்டும் என்று புலவர்களுக்குப் பொன்னும் பொருளும் அள்ளிக் கொடுத்தனர்.

ஆனால் அப்படியான நோக்கம் இல்லாமல், இல்லை என்கிற நிலையில் வந்த அனைவர்க்கும் வாரி வழங்கிய வள்ளல்களாய்த் தமிழகத் தில் குறுநில மன்னர்கள் இருந்தனர்.

அதிகமான், ஆய், ஓரி, காரி, நள்ளி, பாரி, பேகன், குமணன், நல்லியக்கோடன் என்பவர்களெல்லாம் பெரு வள்ளல்களாய்ய இருந்தனர் என்று நாம் அறிவோம் இல்லையா?

அவர்களுள் முதல் எழு பேர்களுமே கொடை எழு வள்ளல்கள் என்று அழைக்கப்பட்டனர்.

இந்தக் கொடை எழு வள்ளல்களில் குமணன் மிகவும் உயர்ந்த உள்ளத்தினன்.

தன் தம்பியால் நாடு கடத்தப் பட்ட நிலையில் சிற்றரசனாய் இருந்த குமணன் காட்டில் வாழத் தொடங்கினான்.

குமணன் தலையைக் கொண்டு வருவோர்க்குப் பொற்காசுகள் கொடுப்பதாக குமணன் தம்பி அறிவித்திருந்தான்.

அந்த நிலையில் காட்டில் குமணனைச் சந்தித்த புலவர் ஒருவர் ஏழ்மையாய் இருந்ததைக் கண்ட குமணன் வருந்தினான். உடனே புலவரிடம், “புலவரிடம், நீங்கள் என் தலையை வெட்டிக் கொண்டு என் தம்பியிடம் கொடுங்கள். அவன் தங்களுக்குப் பொற்காசுகள் கொடுப்பான். இப்போது எனக்குக் கொடுப்பதற்கு வேறு ஏதும் பொருள் இல்லை” — என்றான்.

அந்த அளவு பெருவள்ளலாய் இருந்தான் குமணன். எனவேதான்,

“கொடுக்கனுக்கு அப்பால்
மழையும் இல்லை,
குமணனுக்கு அப்பால்
கொடையும் இல்லை”

— என்று மக்கள் புகழ்ந்தனர்.

அதாவது கொடுக்கன் – என்றால் தேள். கார்த்திகை – என்கிற சமசுகிருத மாதத்திற்கு ‘நளி’ (அதாவது தேள்) என்பதே தமிழ் மாதம் இல்லையா.

அதனால்தான் கொடுக்கன் – அதாவது நளி மாதத்திற்குப் பிறகு ஆண்டில் மழை இல்லாதது போல, குமணனை விஞ்சிய கொடை உள்ளத்தினரும் இல்லை என்றனர்.

— அடிப்படை:
‘பாவாணர் தமிழர்வரலாறு’

# தமிழில் கற்பாய்! நலமே ஓங்கும்!

– பாவலர் ப. எழில்வாணன் –

அன்புத் தம்பி! அறிவுத் தம்பி!
அன்னைத் தமிழே அமிழ்த ஊற்றாம்!
இன்ப வாழ்வின் அரணாய் நின்றே
என்றும் நம்மை இயக்கும் காற்றாம்!

அந்தத் தமிழ்தான் ஆன்றோர் கற்ற
அரிய மொழியாம்! அறிவின் ஒளியாம்!
எந்தக் கல்வி எனினும் கற்க
ஏற்ற மொழியாம்! எளிய தமிழாம்!

தமிழில் கற்பாய்! தமிழும் கற்பாய்!
தாழ்வோ தளர்வோ துளியும் இல்லை!
அமிழ்தை வெறுத்தே உமியை உண்ண
ஆசை கொண்டால் அதுதான் தொல்லை!

தமிழில் கற்கத் தடையாய் நிற்போர்
தங்கள் மானம் துணிந்து விற்பார்!
நமது மானம் வீரம் போற்றி
நாளும் விரும்பித் தமிழில் கற்பாய்!

கலைகள் பயில்வாய்! கணினி பயில்வாய்!
கன்னித் தமிழில் யாவும் முயல்வாய்!
பலவாய்ப் புதுமை தமிழில் செய்வாய்!
பண்டைப் புகழை இன்றும் அடைவாய்!

துறைகள் எல்லாம் தமிழே ஆளும்!
துணிந்து கற்பாய்! துயரம் நீங்கும்!
மறையும் மடமை! குறைகள் தீரும்!
வாழ்வில் இனிமேல் நலமே ஓங்கும்!

*

# நன்றியை என்றும் மறவாதே!

புதுவை தமிழ்நெஞ்சன்

அரிசியில் கல்லைக்
கலக்காதே — செந்
தமிழில் பிறமொழி
சேர்க்காதே
'சாதம் ரைஸ்'செனச்
சொல்லாதே — தமிழ்ச்
சோற்றில் மண்ணைப்
போடாதே
'தேங்ஸ்' என்றுநீ
சொல்லாதே — தமிழ்
நன்றியை என்றும்
மறவாதே
'டாடி மம்மி'
வேண்டாமே — தமிழ்ப்
பாடிப் பறந்தால்
அழகாமே
அம்மா அப்பா
இருக்கையிலே — நீ
அவர்கள் தம்மை
இழக்காதே
அம்மா என்று
சொல்லிடுவாய் — பிற
சும்மா என்று
தள்ளிடுவாய்
தாய்மொழிக் கல்வி
கற்றிடுவாய் — பிற
வாய்மொழி தம்மை
மாற்றிடுவாய்!

*

# சிட்டுக்கு வந்த மடல்கள்

✻ அயல்நாட்டில் இருக்கும் எனக்கு என் அறைதேடி 'தமிழ்ச்சிட்டு வருவது கண்டு பெருமகிழ்ச்சி. இதழ் மிகவும் சிறப்பாக உள்ளது. நன்றி.

— நட குருமூர்த்தி, சவூதி அரேபியா

✻ தென்மொழியுடன் மீண்டும் 'தமிழ்ச்சிட்டு' இசைபாடி வருவது உளத்திற்கு மகிழ்வூட்டுகிறது. பாவலரேறு அவர்களின் இனிய நினைவுகள் மனத்தில் அலை மோதுகின்றன. அவர்தம் நல்லுணர்வுகள் செயலாக்கம் பெறக் காலம் வழிகோலட்டும்.

— புலவர் நாவை. சிவம்,
மணற்பாறை.

✻ தங்கை இறை. பொற்கொடியின் 'அவளும் என் அன்னை தானே!' நல்ல வரைவு. அதில் என் தமிழ் மண்ணைப் பார்த்தேன்.

— பாவலர் இளஞ்சித்திரன்,
வண்டலூர்.

✻ குறிப்பிடத்தக்க சிறுவர்களின் இதழில் தமிழ்ச்சிட்டும் ஒன்று. இன்றைய நிலையில் சத்திமான் போலவும், இரசினி போலவும் வாழ வேண்டும் என நினைத்துக் கொண்டு இருக்கும் சிறுவர்களின் அறியாமைக்கு எதிர்க்குரல் கொடுக்கும் நல்ல சிறுவனாக மாற வேண்டும் எனக் கூறும் ஆசிரியவுரை அருமை

— செ. கோவிந்தராசன், திருச்சி

✻ மார்ச்சு 2000 தமிழ்ச்சிட்டு இதழ் கண்டேன். மிகவும் சிறப்பாக மீண்டும் தமிழ்ச்சிட்டு வெளிவருவது கண்டு மகிழ்கிறேன்.


— வெற்றிச்செல்வன், கரைப்பூண்டி

✻ நானும் என் தம்பி அறிவாளனும் தமிழ்வழிப் பள்ளியில் படிக்கிறோம். அவளும் என் அன்னை தானே என்கிற நிகழ்ச்சி என் பள்ளியில் ஒவ்வொரு நாளும் நடைபெறுவதை நினைவுபடுத்துகிறது.

ஐயாவின் பாடல்களைத் தொடர்ந்து படிக்கிறேன். 'சொல்லடை' பயனாக இருக்கிறது. விடுகதை அறிவியல் செய்திகளுடன் தமிழ்ச்சிட்டு பாடிப் பறக்க விரும்புகிறேன்.

படம் வரையக் கற்றுக் கொடுத்த பொள்ளாச்சிநசன் ஐயாவுக்கு நன்றி.

என் அம்மா கற்றுக் கொடுத்து நானே வரைந்த படத்தைக் கீழே வரைந்துள்ளேன்.



— அ.கு. தமிழ்மொழி,
ஒன்றாம் வகுப்பு, புதுச்சேரி